# ‘ஆஸ்திரேலிய ஆரம்பகால வளர்ச்சிக் கணக்கெடுப்பு’ (AEDC) தகவல் தாள்

## AEDC தரவுகளைச் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல்

### என்ன தகவல் சேகரிக்கப்படுகிறது?

AEDC-இன் சார்பில் சேகரிக்கப்பட்ட தரவுகளில் உங்கள் பிள்ளை பற்றிய தனிப்பட்ட தகவல்கள் உட்பட, அவரின் பெயர்கள், முகவரிகள், கலாச்சாரம் மற்றும் மொழியியல் பின்னணி மற்றும் அவர்களின் உடல்நலம் பற்றிய தகவல்கள் உள்ளடங்கும். AEDC-ஐ ஆசிரியர்கள் நிரப்புவதற்கு உதவும் வகையில் பாடசாலைப் பதிவுகளிலிருந்து இந்தத் தகவல் எடுக்கப்படலாம்.

AEDC-ஐ பூர்த்தி செய்யும்போது ஆசிரியர்களுக்கு எமது பாடசாலை ஊழியர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள் போன்ற கலாச்சார ஆலோசகர்களால் ஆதரவுதவி அளிக்கப்படலாம் மற்றும் அவர்கள் ‘பூர்வீகக்குடியின’ பிள்ளைகளின் கலாச்சார சூழலைப் புரிந்துகொள்ள உதவலாம்.

### AEDC தரவு எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது?

AEDC-ஆனது ‘ஆஸ்திரேலிய தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு கோட்பாடுகளுக்கு’ (Australian Privacy Principles (APPs)) இணங்க நிர்வகிக்கப்படுகிறது. ஆஸ்திரேலிய அரசு நிறுவனங்கள் மற்றும் சில தனியார் துறை நிறுவனங்களால் தனிப்பட்ட தகவல்களை சேகரித்தல், பயன்படுத்துதல், வெளிப்படுத்துதல் மற்றும் சேமிப்பதை APPs ஒழுங்குபடுத்துகிறது, மேலும் இது *தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்டம் 1998* (*Privacy Act 1998* (Cth))-இன் ஒரு பகுதியாகும்.

உங்கள் பிள்ளை பற்றிய தனிப்பட்ட தகவல்கள், சுகாதாரத் துறைகள் போன்ற பிற நிறுவனங்களின் தகவலுடன் AEDC தரவை இணைக்கப் பயன்படுத்தப்படும், இது ரகசியமாக வைக்கப்படும். உங்கள் பிள்ளையின் AEDC முடிவுகள் அவர்களை அடையாளம் காணும் தகவலிலிருந்து தனித்தனியாக வைக்கப்படும் மேலும் எவராலும் ஒரே நேரத்தில் இரண்டையும் அணுக முடியாது.

ஒவ்வொரு பிள்ளைகளின் தனிப்பட்ட AEDC முடிவுகள் ஒருபோதும் அறிவிக்கப்படுவதில்லை, மேலும் வெளியிடப்பட்ட அனைத்து AEDC தரவுகளும் அநாமதேயமாக இருக்கும், அதாவது தரவு வெளியிடப்படுவதற்கு முன்பு பெயர்கள், வயது, முகவரிகள் மற்றும் பிற அடையாளம் காணும் தகவல்கள் அகற்றப்படும்.

தரவுகள் எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன மற்றும் வெளியிடப்படுகின்றன என்பதை www.aedc.gov.au/data என்ற இணையதளத்தை பார்வையிடுவதன் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். 2024-இல் சேகரிக்கப்படும் தரவுகளும் அதே போன்றே வெளியிடப்படும்.

### AEDC தரவு யாருடன் பகிரப்படுகிறது, மற்றும் அது எவ்வாறு பகிரப்படுகிறது?

#### பாடசாலைகள்

தகுதி பெறும் பள்ளிகள் AEDC முடிவுகளின் சுருக்கத்தை பாடசாலை சுயவிவரங்களின் வடிவத்தில் பெறுகின்றன. பிள்ளைகளைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் அடங்கிய எந்த AEDC முடிவுகளும் பாடசாலை சுயவிவரங்களில் வெளியிடப்படுவதுதில்லை. பிள்ளைகளுக்குச் சிறப்பாக ஆதரவுதவி அளிப்பது போன்ற நோக்கங்களுக்காக பாடசாலை தங்களின் சுயவிவரங்களை பிற நிறுவனங்கள் அல்லது நம்பிக்கையான நபர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம், ஆனால் அந்த சுயவிவரங்களை பொதுவெளியில் வெளியிடமுடியாது. பிள்ளைகளின் தனிப்பட்ட தகவல்களை மேலும் பாதுகாக்க, AEDC-இல் ஆறுக்கும் குறைவான பிள்ளைகள் பங்குபற்றிய பாடசாலைகள் சுயவிவரத்தைப் பெறாது.

#### அரசு மற்றும் பள்ளித் துறையின் உச்ச அமைப்புகள்

மாநில மற்றும் பிராந்திய அரசத்துறைகள் மற்றும் கத்தோலிக்க மற்றும் தனியார்ப் பாடசாலைகளின் உச்ச அமைப்புகள், அவர்களின் பள்ளித் துறையில் உள்ள அனைத்து பிள்ளைகள் குறித்த அநாமதேயத் தகவல்களைப் பெறுவார்கள்.

#### அதிகாரிகள் மற்றும் தரவு இணைப்பு துறைகளை ஒருங்கிணைத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட முகமைகள் தங்கள் AEDC முடிவுகளை மற்ற தரவுகளுடன் இணைக்க AEDC இல் பங்கேற்கும் பிள்ளைகளைப் பற்றிய தனிப்பட்ட தகவலைப் பெறும். தரவு இணைப்பிற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளைப் பொறுத்து, அவர்கள் அநாமதேய AEDC முடிவுகளையும் பெறலாம். இந்த முகமைகளில், பிள்ளைகளின் தனிப்பட்ட தகவல்களை பாதுகாக்க போதுமான பாதுகாப்பான அமைப்புகளைக் கொண்டிருப்பதை நிரூபித்துள்ள காமன்வெல்த் ஏஜென்சிகள், மாநில மற்றும் பிராந்திய அரசாங்கங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அடங்கும்.

#### ஆராய்ச்சியாளர்கள்

ஆராய்ச்சிக் கேள்விகளுக்கு பதிலளிக்க, அநாமதேய AEDC தரவு மற்றும் பிற தரவுகளுடன் இணைக்கப்பட்ட AEDC தரவை ஆராய்ச்சியாளர்கள் கோரலாம். AEDC தரவை ஆராய்ச்சியாளர்கள் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டுகளுக்கு https://www.aedc.gov.au/snapshots-ஐப் பார்வையிடவும்

அநாமதேய AEDC தரவு AEDC திட்டத்திற்கு பங்களிக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், அநாமதேயத் தரவு வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படலாம்.

#### ‘AEDC தரவு மேலாண்மை நிறுவனம்’

தனிப்பட்ட தகவல் மற்றும் அநாமதேய AEDC முடிவுகள் ஆஸ்திரேலிய அரசின் கல்வித் துறையின் சார்பாக நியமிக்கப்பட்ட தரவு மேலாண்மை முகமையால் சேமிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. AEDC தரவு மிக உயர்ந்த பாதுகாப்புத் தரங்களுக்கு ஏற்ப நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் ‘AEDC தரவு மேலாண்மை முகமை’ கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படும். தற்போதைய AEDC தரவு மேலாண்மை முகமை சமூக ஆராய்ச்சி மையம் ஆகும்.